1978 செப்டம்பர் 9]

*திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு முடிவு சொன்னதற்கு நான் ஒரு விளக்கம் தங்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். 41-வது விதியின்கீழ் யார், எதைப் பற்றி அறிவிப்புத் தந்திருந்தாலும்கூட, அது அவை முன்னே வருமா, வராதா என்று தெரியாது. இந்த மாதிரி ஒரு கேள்வி இருக்குமானால், 41-வது விதியின்கீழ் அதே பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது என்பதால் கைவிட முடியாது. மேலும், அதை தொடர்ந்து 41, 42 விதிகளின்கீழ் ஒரு பிரச்னையை எழுப்புகிறபோது, முன்கூட்டியே வந்த அந்தக் கேள்வியை நிறுத்த முடியாது. கேள்வியினால் இது பாதிக்கும் என்று கருதி, அவ்வாறு சொல்வது இந்த அவைக்கு ஏற்புடையது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். 41-வது விதியின்கீழ் யார் என்ன கொண்டு வந்தார்கள் என்பது அவையில் உள்ள உறுப்பினர்களுக்குத் தெரியாது. ஆனால் அதை எழுப்பியவருக்குத் தெரிந்திருக்கும். 41-வது விதியின்கீழ் அவர் குறிப்பிட்ட தொழிற்சாலை பற்றிக் கிளப்பியிருக்கிறார். மூலக் கேள்வி சேஷசாயி கம்பெனியைப் பற்றி, அதிலே இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் பற்றிக் கேட்கக் கூடாது.

திரு. க. அன்பழகன்: தாங்கள் அடிப்படையாக அறிவுறுத்த வேண்டிய ஒன்று இது. தொடர்பு இல்லாத கேள்வி என்ற அடிப்படையில் ஒரு கேள்வி மறுக்கப்பட வேண்டுமே தவிர 41-வது விதியில் வருகிறது, 42-வது விதியில் வருகிறது என்ற அந்த அடிப்படையில் மறுக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் மூலக் கேள்வி சம்பந்தப்பட்ட பிரச்சினையை துணைக் கேள்வியாக எழுப்புவதில் பிரச்சினை இல்லை. திரு. உமாநாத் அவர்கள் எழுப்பிய பிரச்சினை 42-வது விதியின்கீழ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த பிரச்சினை குறித்து கேள்வியாக அனுமதித்ததால் பாதிக்கப்பட்டு விட்டதாகக் கூறினார்கள். இதிலே மேலும் விவாதம் வேண்டாம். இதற்கு இதோடு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறேன்.

## 9. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—தொடர்ச்சி

*திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, மன்றத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலில் அவைத் தலைவராகிய தங்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். அவையினுடைய நிகழ்ச்சிகள் முறையாக வகுக்கப்படுகின்றன என்றாலும் கூட, தவிர்க்க முடியாத

[திரு மு. கருணாநிதி] [1978 செப்டம்பர் 9

சூழ்நிலையால் சில நேரங்களில் அந்த நிகழ்ச்சிகளில் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு தடவையும் நாம் எடுத்துக் கொள்கிற நிகழ்ச்சிகள் குறித்த காலத்திலே நடைமுறைப்படுத்த முடியாமல் காலம் தள்ளிக் கொண்டே போகிற ஒரு நிலைமை இந்த மாமன்றத்தில் அடிக்கடி ஏற்படுவதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையின்மீது நேற்றோடு விவாதம் முடிவு அடைவதாக இருந்தது. நேற்று மற்றவர்கள் எல்லாம் பேசி, எதிர்க்கட்சியின் சார்பில் நானும் பேசி, முதல்வர் அவர்கள் பதிலளிப்பது என்று ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சிகளிலுமுள்ள உறுப்பினர்கள் தங்களுக்குப் பேச வாய்ப்பு இல்லையென்று எடுத்துச் சொன்ன முறையீட்டின் காரணமாகவும், எதிர்க்கட்சியிலுள்ள வேறு சில தலைவர்கள் நேற்றையதினம் நீண்ட நேரம் பேசவேண்டிய சூழ்நிலை இருந்த காரணத்தாலும், நான் கோவை மாவட்டத்தில் ஏற்கனவே ஒப்புக் கொண்ட சுற்றுப் பயண நிகழ்ச்சிகளை எல்லாம் நாளையதினம் தள்ளிவைத்து இன்றையதினம் இங்கே கலந்துகொண்டு கழகத்தின் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பளிக்க வேண்டுமென்று தங்களையும் அவை முன்னவரையும் கேட்டுக்கொண்டு பிறகு முதலமைச்சருடன் கலந்து பேசி, இன்று கட்சித் தலைவர்களும், நானும் பேசிய பிறகு முதல்வர் அவர்கள் பதிலளிப்பதாக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் எனக்குச் சந்தேகம்—பல தடவை முதலமைச்சருடைய பதில் தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே போவது இந்த அவையிலே வாடிக்கையாக ஆகிவிட்ட ஒன்று என்ற காரணத்தால் நான் நேற்று மீண்டும் தங்களைக் கேட்டேன். பிறகு தொலைபேசி மூலமாகத் தங்களோடு தொடர்பு கொண்டு கேட்டேன். இன்றைக்குச் சட்டமன்றச் செயலாளர் அவர்கள், காலையிலேயே எதிர்க்கட்சியினுடைய தலைவர்களுடைய கருத்துரைகளும், முதல்வர் அவர்கள் பதிலும் இன்று காலையோடு முடிந்து விடுகிறது என்ற செய்தியை எனக்குச் சொன்னார்கள்.

எதிர்பாராமல் கலை உலகத்தினுடைய பெரும் புள்ளிகளில் ஒருவரான புகழ் பெற்ற சின்னப்ப தேவர் அவர்கள் மறைந்து விட்ட காரணத்தால் அதற்குச் சென்றுவிட்டு முதல்வர் அவர்கள் இன்று காலையில் வந்துவிடுவார்கள் என்றும் எதிர்க்கட்சியினுடைய தலைவர்கள் பேசுகிற நேரத்தில் இங்கு இருப்பார்கள் என்றும் எனக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் காலையில் பத்திரிக்கையைப் பார்த்த பிறகு இன்று காலையில்தான் முதல்வர் அவர்கள் கோவைக்குச் செல்லுகிறார் என்றும், எப்போது வருகிறார் என்றும் தெரியாத சூழ்நிலையில் மீண்டும் நான் தங்களுக்குத் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு கேட்டேன். தாங்கள் அவை முன்னவரைக் கலந்துகொண்டு சொல்வதாகச் சொன்னீர்கள். காலையில் பேசிவிட்டால் முதல்வர் அவர்கள் வந்து பதில் சொல்லுவார் என்று தாங்கள் குறிப்பிட்டீர்கள்.

1978 செப்டம்பர் 9] [திரு மு. கருணாநிதி]

[பிற்பகல் 12-20]

ஒருவேளை நான் பேசுகின்ற நேரத்திலே இடையிலே அவர் வந்தாலும் வந்துவிடக் கூடும் என்ற நம்பிக்கையோடு நான் இங்கே பேசத் தொடங்குகிறேன். எனினும், அவையினுடைய நடவடிக்கைகள் அவை முன்னவருக்கும் எதிர்க்கட்சிகளில் உள்ள தலைவர்களுக்கும், எனக்கு மாத்திரமல்ல, மன்றத் தலைவர்களும் கலந்துபேசி ஒரு உடன்பாட்டின் படி நடைபெறுமானால் அவையை சுமுகமாக நடத்திச் செல்லவும் வகுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் ஒழுங்காக, செம்மையாக நடைபெறச் செய்யவும் வழிவகுத்தவர்களாக நாம் ஆவோம், அதற்கு இனியாவது வேண்டிய ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தங்களையும் அவை முன்னவர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு நான் எதிர்க்கட்சித் தலைவரவர்கள், உங்கள் அறையிலிருந்து தொலைபேசியில் என்னோடு பேசியபோது இன்றைக்குக் காலையில் குறிப்பிட்ட இரண்டு எதிர்கட்சித் தலைவர்கள் பேசியதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நீங்கள் காலையிலே பேசுவதும், மாலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதிலுரை தருவதுமான சூழ்நிலையை ஏற்படுத்துவது சரியாக இருக்குமா என்று கேட்டபொழுது எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை என்று எதிர்கட்சித் தலைவர் சொன்னார் என்பதை நான் அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு மு. கருணாநிதி: நேற்றல்ல, முந்தாநாள்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : 9—ஆம் தேதி பேசுவதாக அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

திரு மு. கருணாநிதி : நான் அவை முன்னவரோடு தொடர்பு கொண்டது நேற்றல்ல, நேற்று முன் தினம் தொடர்புகொண்டேன், நேற்று நேரடியாக தங்களிடத்திலே பேசினேன். நான் சொல்வது, நிகழ்ச்சி நிரலில் வகுக்கப்பட்டதற்கு மாறாக, தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டாலன்றி, அடிக்கடி மாற்றம் ஏற்படக் கூடாது, அதை நாம் கண்காணித்துக் கொள்ளவேண்டுமென்ற முறையிலே நான் இந்த வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே இங்கே பேசிய பல நண்பர்களும் எடுத்துக் காட்டியதைப்போல் காவிரிப் பிரச்சினைப்பற்றி தமிழக அரசு கொண்டுள்ள முடிவும் நிலையும் வரவேற்கத்தக்க ஒன்றாக அமைந்து இருப்பதை நான் பாராட்டக் கடமை

பட்டிருக்கிறேன். ஏனென்றால் காவிரிப் பிரச்சினையில் முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏதோ தவறு விளைவித்து விட்டது என்ற பரவலான பிரச்சாரத்தை அன்று ஆளுங்கட்சியினர் நாடு முழுவதும் செய்துவந்தார்கள். ஆனால் அண்மையிலே டெல்லிப் பட்டணத்திலே நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டிற்குப் பிறகு நம்முடைய முதல்வர் அவர்கள் நிருபர்களிடத்திலே அளித்துள்ள செய்தியிலோ அல்லது விடுத்த அறிக்கையிலோ திட்டவட்டமாகக் கூறியுள்ளார்கள். ஏற்கனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கழக அரசு இருந்த காலத்திலே காவிரிப் பிரச்சினையில் என்ன நிலையைக் கொண்டிருந்ததோ அதே நிலையைத்தான் இன்றைக்குள்ள இந்த அரசும் கொண்டிருக்கிறது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். எனவே அந்த அறிவிப்பின் மூலமாகவே காவிரிப் பிரச்சினையில் முன்பிருந்த கழக அரசு எந்தவிதமான தவறினையும் செய்யவில்லை என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரத்திலே கவர்னர் அவர்களுடைய உரையிலே 9 ஆம் பக்கத்திலே ''குடியரசுத் தலைவர் ஆட்சியின்போதும், அதற்கு முன் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட அரசும் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து காவிரி நீர் பங்கீடு பற்றி இந்த அரசும் முனைப்பாக பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகின்றது'' என்று உள்ள வாக்கியம் கொஞ்சம் அச்சத்தை எனக்குத் தரத்தான்செய்கிறது. ஏனென்றால் குடியரசுத் தலைவர் ஆட்சியின் போதும் அதற்கு முன்பு மக்களாட்சி முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட அரசும் என்று இரண்டையும் இணைத்திருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கழக அரசு இருந்தபோது அனைத்துக் கட்சித் தலைவர்களையும் இங்கே அடிக்கடி கூட்டி அவர்களுடைய, அரிய ஆலோசனைகளையும் கருத்துரைகளையும் பெற்று அவர்களுடைய ஆலோசனைகளை மாத்திரம் அல்ல, முன்னாள் முதல்வர்கள், பெருந்தலைவர் காமராஜ் அவர்களை அணுகியும் பெரியவர் பக்தவச்சலம் அவர்களை அணுகியும் காவிரிப் பிரச்சினைபற்றி அரிய யோசனைகளையெல்லாம் கேட்பதை தமிழக அரசு அன்றைக்கு தன்னுடைய நிலையாகக் கொண்டிருந்தது. ஆனால் 1976 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியின்பொழுது, நம்முடைய மின்துறை அமைச்சர் குறிப்பிட்டார்கள், ஒப்பந்தம் அல்ல என்று, ஆனால் ஏதோ ஒருவிதமான உடன்பாடு ஏற்பட்டு, அதை இன்றைக்குக் கர்நாடக அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது என்பதைப் பத்திரிக்கைகளிலே நாம் செய்தியாகப் பார்க்கிறோம். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் அது விளக்கப்பட்டதாக நான் அறிகிறேன். இங்கே தந்த உரையிலே, குடியரசுத் தலைவர் ஆட்சியின் போதும், அதற்கு முன் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட அரசும் நடத்திய பேச்சு வார்த்தைகள் தொடரும் என்று இந்த இரண்டு ஆட்சியின்பொழுதும் எடுக்கப்பட்ட முடிவுகளை

1978 செப்டம்பர் 9] [திரு மு. கருணாநிதி]

அல்லது பேசப்பட்ட கருத்துக்களைத் தொடர்ந்து என்று கவர்னர் உரையிலே இருப்பது எங்கே ஆபத்தை விளைவித்து விடக் கூடுமோ என்று அஞ்சுகிறேன். குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது எடுக்கப்பட்ட உடன்பாடு அல்லது பேச்சு வார்த்தை தமிழ்நாட்டு மக்களுக்குப் பாதகமான முறையில் அமைந்தது என்பதை அன்றைக்கு நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

இங்கே அரசு இன்றைக்கு எடுத்திருக்கின்ற காவிரி பிரச்சினை பற்றிய முடிவு, முதலமைச்சர் அறிவித்திருப்பதைப்போல அரசாங்கத்தினுடைய நிலையை எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு மாறாக, அதே கருத்தை வேறுவிதமாகக்கூடச் சொல்லியிருக்கலாம். தமிழ்நாட்டிலே உள்ள அனைத்துக் கட்சிகளுனுடைய கருத்துக்களை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டால் அது அரசின் கரத்தைப் பலப்படுத்துவதற்குக் கூடப் பயன்படும் என்று நான் நம்புகிறேன். கர்நாடகத்திலே அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரவர்கள் அங்குள்ள எதிர்கட்சிகளையெல்லாம் பார்த்துச் சொல்கிறார்கள், ''நீங்களெல்லாம் காவிரிப் பிரச்சினைமீது வேகமாகப் பேசுவதை நான் வரவேற்கிறேன், அப்பொழுதுதான் அதை வைத்துக் கொண்டு நான் போராட முடியும்'' என்றெல்லாம் அவர் பேசுகிறார். அதைப்போலவே, காவிரிப் பிரச்சினையிலே தெளிவான முடிவெடுக்க வேண்டிய கட்டத்தில் தாமதமாக இருக்கிறது என்று எதிர்க்கட்சிகளின் சார்பில் குறைகள் கூறப்பட்டாலும் அவைகளை நீங்கள் முதலமைச்சர்கள் மாநாட்டிலே நடத்துகின்ற பேச்சுவார்த்தைக்கு ஏற்ற போர்க் கருவிகளாக ஏற்றுக்கொண்டு நம் மாநிலத்திற்கு நன்மைகள் விளையும் வகையில் இந்தப் பிரச்சனையில் நல்ல தீர்வு காண வேண்டுமென்று நான் இந்த அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் இந்தித் திணிப்பு எதிர்ப்பு முழக்கம் இடம் பெற்றிருப்பதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகின்றேன். அதே நேரத்திலே, இங்கு காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும், ஜனதாக் கட்சியின் சார்ப்பிலேயும் பேசிய தலைரவர்களும், உறுப்பினர்களும் இந்தித் திணிப்பு இல்லை என்று பிரதமர் அறிவித்துவிட்ட பிறகு அதைப்பற்றி நீங்கள் ஏன் சந்தேகப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்தித் திணிப்பு இல்லை என்று சொல்லிக் கொண்டே இந்தியைப் படித்தால்தான் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும் என்று நாட்டு மக்களைப் பார்த்துச் சொல்வது ஒருவகையான திணிப்பே தவிர வேறல்ல. இந்தக் காரணத்தாலேதான் இந்தித் திணிப்பை எதிர்ப்போம் என்ற முழக்கத்தை கூட மாற்றி இந்தியை எதிர்ப்போம் என்று சொல்ல வேண்டிய அளவிற்கு இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியைத் திணிக்க மாட்டோம், ஆனால் எதிர் காலத்தில் ஆட்சிமொழியாக, தொடர்பு மொழியாக இந்திதான்

இருக்கும் என்று சொல்கிறார்கள். வெளியிலே வீசுகின்ற வாடை காற்று உள்ளே நுழையாது என்று உத்தரவாதம் அளித்துவிட்டு, ஆனால் ஜன்னலைத் திறந்து வை என்று சொல்வதைப் போல், இந்தியைத் திணிக்க மாட்டோம், ஆனால் இந்தி படிக்காவிட்டால் எதிர்கால வாழ்வு நன்றாக இருக்காது என்று கூறுவது மறைமுக மான இந்தித் திணிப்பு என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது. அந்தக் கொள்கைச் சார்புடைய மற்றக் கட்சிகளும் கருதுகின்றன. இந்தியாவிலே உள்ள 14 தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாக வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய குறிக்கோள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அதைப் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தக் குறிக்கோளை விரைவிலே எட்டுவது சாத்தியமா என்ற கேள்வி எழுகின்ற நேரத்தில் அந்தக் குறிக்கோளை நாம் எட்டுகின்ற வரையில் ஒரு சமரச ஏற்பாடாக ஆங்கிலம் நீடித்தே தீர வேண்டுமென்ற கொள்கையை நாம் எடுத்துச் சொல்லி வருகிறோம்.

(பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கைகள் வீசப்பெற்றன.)

இரு மொழிக் கொள்கை இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நடை முறையிலே இருந்து வருகிறது.

[பிற்பகல் 12-30.]

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், 1968 ஆம் ஆண்டு மீண்டும் மொழிப் போராட்டத்திற்கான நிலைமை உருவானபொழுது இந்தச் சட்டமன்றத்திலே அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி தமிழ் நாட்டில் பள்ளிக் கூடங்களில் தமிழ், ஆங்கிலம் இரண்டும் தான்; இந்திக்கு இடம் இல்லை. இந்திக் கற்றுத் தருகின்ற ஆசிரியர்களுக்கு மாற்று வேலை தரப்படும் என்கின்ற அறிவிப்பை இந்த மாமன்றத்திலே அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

இந்த இரு மொழிக் கொள்கை தமிழ் நாட்டிலே மாத்திரம் அல்ல, இந்தியா முழுமையும் கடைபிடிக்கப்பட வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன். சிலர் தவறாக எண்ணக் கூடும், இந்தியா முழுமையும் இரு மொழிக் கொள்கை கடைபிடிக்கப்பட வேண்டுமென்று சொன்னால் ஆங்கிலம், இந்தி என்ற இருமொழிக் கொள்கையா என்ற கேள்வி எழக்கூடும். நான் அதற்குத் தரு கின்ற விளக்கம் எல்லாம் தமிழ் நாட்டிலே தமிழும் ஆங்கிலமும் என்று இருப்பது போல், ஆந்திராவிலே தெலுங்கும் ஆங்கிலமும் என்று கர்நாடகத்திலே கன்னட மொழியும் ஆங்கிலமும் என்றும்

கேரளாவிலே மலையாள மொழியும் ஆங்கிலமும் என்றும் மேற்கு வங்கத்திலே வங்க மொழியும் ஆங்கிலமும் என்றும் உத்தரப் பிரதேசத்திலே இந்தியும் ஆங்கிலமும் என்றும் மத்திய பிரதேசத்திலே இந்தியும் ஆங்கிலமும் என்றும் இருந்து விடுமேயானால் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் பல்வேறு சலுகைகளைப் பெறவும் வேலை வாய்ப்புகளிலே முதலிடத்தைப் பெற்றுக் கொள்ளவும் தேர்வுகளிலே அதிக எண்களைப் பெற்று ஆதிக்க சக்தியாக உருவெடுக்கவுமான சூழ்நிலை நிச்சயமாக மாற்றப்படும்.

(திரு. பி.எச். பாண்டியன் தலைமை.)

இல்லையேல் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக எடுத்துக் கொண்டு இந்தி, படிக்காவிட்டால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லையென்கின்ற மறைமுகமான கட்டாயத்திற்கு—நேரடியான கட்டாயம் அல்ல, நேரடியான திணிப்பு அல்ல, மறைமுகமான திணிப்புக்கு ஆளாக்கி, இந்தி பேசாத மாநில மக்கள், அதுவும் குறிப்பாக 40 ஆண்டுகால மாக மொழிப் போராட்ட வரலாற்றுக்கு உரியவர்களாக இருக்கிற தமிழ் நாட்டு மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கப் பட்டு விடுவார்கள் என்கின்ற ஐயப்பாட்டின் காரணமாகத்தான்—ஐயப்பாடு என்று கூடச் சொல்லமாட்டேன்;—உறுதியாக எதிர் காலத்திலே நடைபெறக்கூடிய அந்த ஆபத்தை உணருகிற காரணத்தாலேதான் நாம் இந்தியை எதிர்க்கிறோம். இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம் என்பதைக் கூட மாற்றிக் கொண்டு, இந்தியை எதிர்க்கிறோம் என்று சொல்லக்கூடிய நிலைக்கு நாம் தள்ளப்படுகிறோம்.

இரண்டொரு உதாரணங்களைச் சொல்வோமானால், எனக்குச் சென்னையில் நடைபெற்ற 'மெட்ராஸ் பீச் ரெயில்வே ஸ்டேஷன்' அங்கே 'நவஜீவன் எக்ஸ்பிரஸ்' என்கின்ற ஒரு புகை வண்டியினுடைய 'இனுகுரேஷனுக்கு' அழைப்பிதழ் எனக்கு வந்தது. அந்த அழைப்பிதழில் முதல் பக்கத்திலே இந்தியிலே அச்சடிக்கப் பட்டிருக்கிறது. அதை பார்த்தால், 11 என்கின்ற எழுத்தையும் 1978 என்கின்ற எழுத்தையும் தவிர வேறு எதுவும் எனக்குப் புரியவில்லை. இரண்டாவது பக்கத்திலும் இந்தியிலேதான் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது பக்கத்தில் ஆங்கிலத்திலே அச்சடிக்கப்பட்டிருக்கிறது. நிகழ்ச்சி நடைபெறுகிற இடம் தமிழகத்தினுடைய தலைநகரமான சென்னைப்பட்டினம். சென்னை நகரிலே நவஜீவன் எக்ஸ்பிரஸ் தொடக்க விழா நடைபெறுகிறது. இதிலே ஆளுநர் தலைமை வகித்து அந்த விழாவை நடத்தி வைக்கிறார். ஆனால், இதிலே தமிழுக்கு இடம் இல்லை. முதல் இடத்தை, முக்கியமான இடத்தை, முதல் பக்கத்தை, இரண்டாவது பக்கத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது இந்தி, அதிலாவது

ஆங்கிலத்திற்கு இன்னொரு பக்கம் ஒதுக்கியிருக்கிறார்கள். எனக்கு இன்னொரு தகவல் சான்றாகக் கிடைத்திருக்கிறது. அதை இந்த அவையிலே நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

மண விழாக்களுக்கு வாழ்த்து மடல், 'கிரீட்டிங்ஸ்' அனுப்புவதற்கு அஞ்சல் நிலையங்களில் இப்படிப்பட்ட வாழ்த்து மடல்களை விற்பனை செய்கிறார்கள். இதுவரையிலே இந்த வாழ்த்து மடல்கள் ஆங்கிலத்திலே அச்சடிக்கப்பட்டு வந்தன. ஏதோ தமிழிலே அச்சடிக்கப்பட்டு விட்டது என்று நான் மகிழ்ச்சியாகச் சொல்லப் போகிறேன் என்று யாரும் எண்ணி மகிழ்ந்து விட வேண்டாம். இப்பொழுது அது அறவே மாற்றப்பட்டு வாழ்த்து மடல்கள் முழுக்க, முழுக்க இந்தியிலே அச்சடிக்கப்பட்டு அவைகள் அஞ்சலகங்களிலே விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

மெல்ல மெல்ல ஆனால் மறைமுகமாக எப்படியும் உறுதியாக தமிழகத்திலே இந்தி பேசாத மக்களிடையே இந்தியை நுழைப்பதற்கு சூழ்ச்சி வலை பின்னப்படுகிறது என்கின்ற குற்றச் சாட்டை நான் இந்த அவையிலே சொல்லாமல் இருக்க முடியாது. எனவேதான் எந்த வகையிலாவது எதிர்காலத்திலே இந்தியா முழுமையும் இந்தி மொழியைத் தொடர்பு மொழியாக ஆக்கியே தீரவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்ற மத்திய அரசும், மத்திய அரசுக்கு ஆதரவு தருகிற வடபுலத்து மாநிலங்களிலே உள்ளவர்களும் திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தித் திணிப்பு இல்லை என்ற பேரால் இபபடிப்பட்ட மறைமுகமான காரியங்கள் நாட்டிலே நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலே பிறந்த தமிழன் இப்படி ஒரு இந்தி வாழ்த்து மடலை வாங்கி இன்னொரு தமிழனுக்கு வாழ்த்து அனுப்ப வேண்டிய சூழ்நிலை இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்தியை எதிர்ப்பதே தவறு என்று சில பேர்கள் பேசினார்களே, அது பொருள் பொதிந்த வாதமா என்பதை அந்த நண்பர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அவை கூடி இருக்கும் இந்த நேரம் பெரியாருடைய நூற்றாண்டு விழாவை நாம் அண்மைக்காலத்திலே கொண்டாட இருக்கின்ற நேரம் ஆகும். பெரியாருடைய 100-வது பிறந்த நாள் விழா, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய 70-வது பிறந்த நாள் விழா இவைகளை எல்லாம் கொண்டாடுகின்ற சூழ்நிலையிலே இந்த அவை கூடியிருக்கிறது. எனவே அதற்குள்ளாக அவையினுடைய நிகழ்ச்சிகள் எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலே அவைத் தலைவர் மாத்திரம் அல்ல, அவை முன்னவர் மாத்திரம் அல்ல, நாங்களும் கூடத் துடிப்பாக இருக்கிறோம்.

1978 செப்டம்பர் 9] [திரு. மு. கருணாநிதி]

இப்போது பெரியாருடைய நூற்றாண்டு விழாவை ஒட்டி சில கருத்துக்களை நான் இங்கே எடுத்து வைப்பது முறை என்று கருதுகிறேன். அதிலே எனக்குள்ள குறைபாடு ஒன்றைத் தெரிவிக்காமல் இருக்க இயலாது. பல குழுக்கள்—அனைத்துக் கட்சிக்களின் குழுக்கள்—அரசின் சார்பிலே அமைக்கப்படுகிறது. அப்படி அமைக்கப்படுகிற நேரத்தில் இந்தக் குழுக்களில் உங்களின் கட்சியின் சார்பாக யார் இடம் பெறுகிறார் என்கின்ற கேள்வியை அந்தக் கட்சியினுடைய தலைவருக்கோ அல்லது பொதுச் செயலாளருக்கோ அல்லது கட்சியினுடைய தலைமை நிலையத்திற்கோ அரசின் சார்பிலே எழுதி, அவர்கள் யார் இதிலே இடம் பெறுகிறார்கள் என்று அறிவித்து, அவர்களை இடம் பெறச் செய்வதுதான் முறையான காரியமாக இருக்க முடியும். ஆனால் பெரியார் நூற்றாண்டு விழாக்குழு என்று ஒன்று அமைக்கப்பட்ட பொழுது எங்களுடைய கட்சியினுடைய தலைமையைக் கலந்து கொள்ளாமலேயே ஒரு உறுப்பினருடைய பெயர் அதிலே குறிப்பிடப்பட்டது. அதற்குப் பிறகு அந்த உறுப்பினர் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இல்லை. அதன் பிறகு கூட நண்பர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களுக்கு தனியாக ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. பெரியாருடன் நீங்கள் நீண்டகாலம் பழகியவர்கள், எனவே அந்தக் குழுவிலே நீங்கள் அங்கம் வகிக்கவேண்டும் என்று ஒரு கடிதம் செய்தித் துறை வாயிலாக அனுப்பப்படுகிறது, அதற்கு அவர் எழுதிய பதில் நீங்கள் தலைமைக் கழகத்திற்கு எழுதிக் கேட்டால் அவர்கள் மூலமாகத்தான் அவர்கள் என்னை நியமிக்க முடியுமே தவிர, நான் தனிப்பட்ட ஆள் அல்ல, அந்தக் கட்சியிலே ஒரு அங்கம் வகிக்கிறேன், எனவே தலைமைக் கழகத்திற்கு எழுதிக் கேளுங்கள் என்று பதில் அனுப்பினார், அது கூட பத்திரிகைகளிலே செய்தியாக வந்திருக்கின்றது. முறைப்படி இது நடைபெறுமானால் அது பாராட்டத் தக்கதாக இருக்கும். ஆனால் அந்தக் குழுக்களில், அந்தக் கட்சியின் உறுப்பினர் இன்னார் தான் இருக்க வேண்டும் என்று சொல்கிற அந்த உரிமையும் அரசாங்கத்தினுடைய செய்தித் துறையோ அல்லது அரசாங்கமோ எடுத்துக் கொள்வது நல்லதல்ல என்பதை எடுத்துக் காட்ட நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

பெரியாருடைய நூற்றாண்டு விழாவைக்கொண்டாடுகிற நேரத்தில் நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புவது எல்லாம் பல நண்பர்கள் எங்கள் கட்சியின் சார்பிலேயும், மற்ற நண்பர்களும் எடுத்துக் காட்டியதைப் போல இந்த மன்றத்தில் தந்தை பெரியார் அவர்களுடைய படம் திறந்து வைக்கப்பட வேண்டும் என்கின்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. மு. கருணாநிதி] [1978 செப்டம்பர் 9

[பிற்பகல் 12-40]

சிலர் சொல்லக்கூடும், பெரியார் இந்த மன்றத்திலே இருந்தவர் இல்லை. எந்தப் பொறுப்பிலும் இந்த மன்றத்திலே இருந்தவர் இல்லை என்று. வள்ளுவர் இந்த மன்றத்தில் இருந்தவர் இல்லை. எந்தப் பொறுப்பிலும் இந்த மன்றத்தில் இருந்தவர் இல்லை. இங்கே அவைத் தலைவருக்கு மேலே இருக்கிற காந்தி அடிகளும் இந்த மன்றத்தில் இருந்தவர் இல்லை. இந்த மன்றத்தில் எந்தப் பொறுப்பிலும் இருந்தவர் இல்லை. ஆனால் அவர்கள் நம்முடைய மன்றத்தில் இருக்கிற எல்லோருடைய உள்ளத்திலும் இருப்பதைப் போலத்தான் தந்தை பெரியார் அவர்களும் இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களின் உள்ளத்திலே இடம் பெற்று இருக்கிறார். நம்முடைய உள்ளத்திலே இடம் பெற்று இருக்கும் தந்தை பெரியார் தமிழ் சமுதாயத்தை விழிப்புறச் செய்யவேண்டும் என்று காலமெல்லாம் கடுமையான பிரச்சாரம் செய்தவர், தன்மான உணர்வு தமிழனுக்குத் தேவை என்று எடுத்துச்சொல்லி, அதற்காக எண்ணற்ற இன்னல்களை ஏற்றுக்கொண்ட அந்தக் கிழச் சிங்கத்தின் படம் இந்த மன்றத்தில் திறந்து வைப்பதன் மூலம் பெருமை அடையும், அந்த பணியைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியாரின் 100-வது விழா அன்று சிறைச்சாலையில் இருக்கிற தூக்கு தண்டனை பெற்ற கைதிகளுக்கு, அவர்களுடைய தண்டனையை ஆயுட் கால தண்டனையாக மாற்றலாம். அதைப் போலவே, ஆயுட்கால தண்டனை பெற்ற கைதிகளுக்கு தண்டனை குறைப்புச் செய்யலாம். இந்த இரண்டு தண்டனை இல்லாது வேறு தண்டனை பெற்ற கைதிகளுக்கும் ஓரளவு தண்டனை குறைப்பதன் மூலம் பெரியார் 100-வது விழாவில் ஒரு அடையாளமாக நாம் அந்தக் காரியத்தைச் செய்தோம் என்ற நிலைமை ஏற்படும். அதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் அண்மைக்காலமாக விரும்பத்தகாத சில காரியங்கள், சாதிப் பூசல்கள், வகுப்புக் கலவரங்கள், பழனி, விழுப்புரம், பேரணம்பட்டு, ராணிப்பேட்டை, புதுக்கோட்டை, கோவை போன்ற பல இடங்களில் நடைபெற்று இருப்பது மிக மிக வருந்தத்தக்க ஒன்றாகும். அவற்றைத் தவிர்க்க எல்லாக் கட்சிகளுடைய ஒத்துழைப்பையும் அரசு பெற்றிடவேண்டும். விழுப்புரத்தில் நடைபெற்ற சம்பவம் மிகவும் கோரமான சம்பவம் ஆகும். பன்னிரெண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் உயிர் பறிக்கப்பட்டது. பல ஏழை எளியவர்களின் வீடுகள் தகர்க்கப்பட்டன. பல பெண்கள் நடுத்தெருவில் நிற்கும் அளவிற்கு அவர்களுடைய உடைமைகளை இழந்து விட்டனர். அவர்களுடைய கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. அவைகளைத் தடுக்க தக்க நேரத்தில் காவல் துறையினர் முன் ஜாக்கிரதையோடு நடவடிக்கை எடுத்து

இருப்பார்களானால் தவிர்த்து இருக்க முடியும் என்ற கருத்தை எதிர்க் கட்சியின் சார்பில் நானும் சரி, மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களும் சரி எடுத்துக் காட்டி இருக்கின்றோம். நான் விழுப்புரத்திற்குச் சென்றபோது, நான் தங்கி இருந்த விடுதியைச் சுற்றி ஏராளமான பேர் வந்து அவர்களுடைய குறைகளை எடுத்துச்சொன்ன போது நான் அவர்களுக்கு விடுத்த வேண்டுகோள் அமைதியாக இருங்கள், அதிலும் குறிப்பாக நம்முடைய கழகத்தைச் சேர்ந்த நண்பர்களுக்கு நான் சொல்வது எல்லா வகைகளிலும் ஒத்துழைப்பையும், அமைதியையும் ஏற்படுத்துவதற்கு நாம் அரசுக்கு உதவியாக இருக்கவேண்டும் என்ற கருத்தை நான் எடுத்துச் சொல்லி விட்டு வந்தேன். சென்னைக்கு வந்த உடனே நிருபர்கள் கூட்டத்திலே அதே கருத்தைத்தான் நான் எடுத்துச்சொன்னேன். ஆனால் எதற்கெடுத்தாலும் எதிர்க்கட்சியைக் குறை சொல்லவேண்டுமென்று ஆளும் கட்சியில் உள்ள அமைச்சர்கள் அல்லது ஆளும் கட்சியில் உள்ள முன்னணி நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் விழுப்புரம் நிகழ்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டிவிடுகிற போக்கில் நடந்து கொண்டது என்ற நிலையிலே அவர்களுடைய கருத்தை அமைத்துப் பேசினார்களே அல்லாமல் நாங்கள் எடுத்துச்சொன்ன நிலை என்ன என்பதை அவர்கள் புரிந்து கொள்ளத் தவறி விட்டார்கள் என்பதை நான் இங்கே வருத்தத்தோடு மறுபடியும் சொல்லாமல் இருக்க முடியாது.

விழுப்புரம் சம்பவத்தை நேரில் கண்டறிவதற்காக எங்கள் கழகத்தின் சார்பாக பொருளாளர் சாதிக் பாட்சா அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் கு. பாலன் அவர்களும் சென்றார்கள். அதற்குப் பிறகு நானும் மற்றவர்களும் விழுப்புரம் சம்பவத்தைப் பார்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறச்சென்றோம். செல்வதற்கு முன்பே எங்களுடைய கழகத்தின் விவசாய அணிச் செயலாளர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களை முன் கூட்டியே விழுப்புரத்திற்குச் சென்று — நாங்கள் திடீரென்று பாதிக்கப்பட்ட இடத்திற்குச் செல்வதால் ஏதாவது சிறு அசம்பாவிதம் ஏற்படுமானால் அதனால் மீண்டும் ஒரு அமளிக்கு வித்திட்ட நிலைமை ஏற்பட்டு விடக்கூடாது என்று — விழுப்புரத்தில் தங்கி இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை அதிகாரி ஆகியோரை சந்தித்து, நான் வருவதாக எடுத்துச்சொல்லி, அவர்கள் தங்கி இருக்கும் அந்த இடத்திற்கே நான் வந்து சந்திப்பதாகச் சொல்லி, அவர்கள் ஏற்பாடு செய்து இருந்தார்கள். நான் போய் தங்கி இருக்கிற இடத்திற்கு மாவட்ட ஆட்சி தலைவர் வரவேண்டுமென்று நான் சொல்லவில்லை; அப்படி வர வேண்டுமென்று நான் எதிர்பார்ப்பவனும் அல்ல; அப்படி எதிர் பார்ப்பதற்கு நான் ஏமாளியும் அல்ல. எனவே, நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களை சொல்லி அனுப்பி, அன்று காலையிலே விழுப்புரம் சென்று, அங்கே தங்கியிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து, "எதிர்க்கட்சித் தலைவர் வருகிறார். உங்களிடத்திலே சில விவரங்களைக் கேட்டு, அதன் பிறகு பாதிக்கப் பட்ட இடத்திற்குச் செல்லலாம் என்று இருக்கிறார்" என்று

சொன்னபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் ''நான் அவர்களுக்கு அனுமதி தர இயலாது, நான் ரவுண்ட் போகிற இடத்தில் வேண்டுமானால் சந்திக்கிறேன்'' என்று நண்பர் கிருஷ்ணமூர்த்தியிடம் சொல்லிவிட்டார்.

அதற்குப் பிறகு இன்னொரு இடத்தில் தங்கி இருந்த எஸ்.பி. அவர்களிடம் கிருஷ்ணமூர்த்தி போய் சொல்லி, ''உங்களைச் சந்திக்க எதிர்க்கட்சித் தலைவர் வருகிறார், அதற்கு வசதி செய்து கொடுங்கள்'' என்று சொன்னபோது, அதற்குப் பதில் சொல்லாமல் அங்கே இருந்து — கருணாநிதி வந்தால் என்ன நடக்குமோ என்ற அச்சத்தின் காரணமாக எப்படியாவது அதைத் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில் — ஜீப்பை எடுத்துக்கொண்டு போய் விட்டார். இப்படி மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறை அதிகாரியும் நடந்து கொண்டது மிக மிக வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது. அரசு நேரடியாக அவர்கள் செய்கையை கண்டிக்காவிட்டாலும், அல்லது ஒப்புக்கொள்ள மறுத்தாலும், அந்த அதிகாரிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று நினைத்தாலும், அவர்களிடம் தனிப்பட்ட முறையிலே எடுத்துச்சொல்லி, இப்படிப் போகக் கூடாது என்ற நிலையை அரசு எடுக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை)

விழுப்புரத்தில் நடந்ததுபோன்று வேறு பல இடங்களிலும் நடைபெற்றிருக்கின்றன. வடார்க்காடு மாவட்டத்தில் பேரணாம் பட்டில் நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட வகுப்பு கலவரங்கள் இந்துக்களையும் முஸ்லீம்களையும் பொறுத்தவரையில் தமிழகத்தில் அவர்கள் அண்ணன் தம்பிகளாக, சகோதரர்களாக, நல்ல நட்புறவு கொண்டவர்களாக வாழ்ந்துவந்து கொண்டிருக்கிறார்கள். பெரியாருடைய பிரச்சாரத்தாலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பணியினாலும், அவர்கள் இருவரோடும் சேர்ந்திருந்த பண்பாளராக கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்களின் பெரும் முயற்சியாலும் தமிழ்நாட்டில் இந்து — முஸ்லீம்களிடையே நல்ல சகோதரத்துவம் நிலவி வருகிறது. அது கெடக்கூடிய நிலையில் பேரணாம் பட்டு சம்பவம் நடந்திருக்கிறது. நான் அந்தச் சூழ்நிலைகளைத் திரும்பவும் சொல்லி பிரச்சனையை மேலும் மோசமானதாக ஆக்கிவிட விரும்பாத காரணத்தால் அதன் தொடர்பாக வேறு பிரச்சனைகள் உருவாகக் கூடாது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பேரணாம்பட்டில் நடந்த கலவரத்தை அடுத்து வடார்க்காடு மாவட்டம் முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்பே திருவண்ணாமலையில் 27–8–1978-ம் நாளன்று திராவிடமுன்னேற்றக் கழகத்தின் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று அங்குள்ள திராவிட

1978 செப்டம்பர் 9] [திரு. மு. கருணாநிதி]

முன்னேற்றக் கழக நகர அமைப்பு வேண்டுகோள் விடுத்தது அதிகாரிகளிடத்தில், உள்ளூர் அதிகாரிகள் ஒத்துக்கொண்டால் ஏற்றுக்கொள்ளலாம் என்று மேலதிகாரிகள் தெரிவித்தார்கள். உள்ளூர் அதிகாரிகள் அதற்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்ததாக எனக்கு நம்பகமான தகவல் வந்தது. ஆனால் மேலதிகாரிகள் கூட்டம் நடைபெற அனுமதிக்கவில்லை. எனவே, 144 தடை உத்தரவை மீறி திருவண்ணாமலையிலே திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் நடைபெற்று, கோவை இராமநாதன், தேவகி பாண்டியன், முருகையன், தர்மலிங்கம் உட்பட 35 பேர் கைது செய்யப்பட்டு, சம்மன் வரும்போது நீங்கள் வரவேண்டும்; உங்கள் மீது வழக்கு தொடரப்படும் என்று சொல்லி அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

நான் இங்கே எடுத்துச்சொல்ல முற்படுவது என்னவென்றால் அப்படியே திருவண்ணாமலையில் திராவிட முன்னேற்றக் கழகக்கூட்டம் நடைபெற்றிருந்தாலும் நான் இங்கே எடுத்துச்சொன்னதைப் போல இந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்களாக வாழ்ந்து வருகிறார்கள்; அந்தச் சூழ்நிலை கெட்டுவிடக்கூடாது என்ற அடிப்படையிலே அந்தக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் நிச்சயமாகப் பேசியிருப்பார்கள்; அமளியை உருவாக்குகின்ற தன்மையிலும், கலவரம் நடக்க வேண்டுமென்ற தன்மையிலும் பேசியிருக்கமாட்டார்கள். இருந்தாலும் 144 தடை உத்தரவைக் காட்டி 35 பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள்.

வேடிக்கை என்னவென்றால், அதே நாளில் வந்தவாசியில் பாதிரி என்ற கிராமத்தில் அண்ணா தி.மு.க.வினர் கூட்டம் நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தினுடைய விளம்பர துண்டுத்தாள் என்னிடத்தில் இருக்கிறது. 27—8—1978, வந்தவாசி—அந்தக் கூட்டம் பாதிரி கிராமத்தில் அதே நாளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆளுக்கொரு நீதி. ஒரு கட்சிக்கு தடை, இன்னொரு கட்சி கூட்டம் நடத்தலாம் என்று அனுமதி. இது அரசின் தலையீடு, அரசியல் நோக்கத்தோடு திட்டமிட்டு செய்யப்பட்டது என்று நான் சொல்லமாட்டேன். அங்கு இருக்கிற அதிகாரிகள் அப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள்; அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்பதால் இங்கே எடுத்துக்காட்டுகிறேன்.

[பிற்பகல் 12—50]

திரு. அ. க. அரங்கநாதன்: பேரவைத் தலைவரவர்களே, அதே 27 ஆம் தேதி நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் திருவண்ணாமலையில் பேசுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த நேரத்திலே 144 தடை உத்தரவு போடப்பட்டிருந்தது. கூட்டம் நடத்தக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னதன் பேரில் அன்றைக்கு உணவு அமைச்சர் அவர்களின் கூட்டமும் ரத்து செய்யப்பட்டது. ஆனால் அதே

[திரு. அ. க. அரங்கநாதன்] [1978 செப்டம்பர் 9

நேரத்தில் வேலூரிலே ஒரு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டம் குட்டைமேடு என்ற பகுதியில் அன்றைக்குக் கூட்டப் பட்டிருக்கின்றது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவு சரிவர பல இடங்களுக்கும் செல்லாத காரணத்தாலேயே சில இடங்களில் திராவிட முன்னேற்றக் கழக மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள் 27 ஆம் தேதி கூட்டப்பட்டன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: என்னுடைய கருத்துக்கும், என்னுடைய வாதத்துக்கும் வலு சேர்க்கின்ற அளவிற்கு உறுப்பினர் அவர்கள் விளக்கம் அளித்ததற்காக அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். ஒரே மாவட்டத்தில் 144 தடை உத்தரவு போட்டுவிட்டு ஒரு இடத்திலே கூட்டம் நடத்தியவர்களைக் கைது செய்வதும் இன்னொரு இடத்திலே கூட்டம நடத்தியவர்களைக் கைது செய்யாமல் இருப்பதுமான இந்தப் போக்கு சட்டம், ஒழுங்கு அமைதியைக் காப்பதற்கு அடையாளமாக இருக்குமா என்ற கருத்தைத்தான் சொன்னேன். அரசாங்கத்திலிருந்து அப்படிப்பட்ட ஆணைகள் போனதாக நான் சொல்லவில்லை. அதிகாரிகள் முரண்பாடான போக்குகளை வட ஆற்காடு மாவட்டத்திலே கடைப்பிடித்தார்கள் என்றுதான் சொன்னேன். ஒரே மாவட்டத்திலே தடை உத்தரவு என்று போட்டு விட்டு ஒரு இடத்திலே கூட்டம் நடத்துவதும் இன்னொரு இடத்திலே கூட்டம் நடத்தாமல் இருக்கவுமான சூழ்நிலையினை உருவாக்கி இருக்கிறார்கள். அது முறையல்ல என்பதைத்தான் சொன்னேன்.

ஆளுநர் உரையில் மிக முக்கியமாக இந்த ஓர் ஆண்டு காலத்தில், இந்த ஆட்சியில் எந்தத் தலையீடுகளும் கிடையாது, குறுக்கீடுகளும் கிடையாது, முறைகேடுகளும் கிடையாது, ஊழலை எதிர்ப்பதில் ஒரு பெரும் போராட்டமே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பன போன்ற மையக் கருத்துக்கள் எல்லாம் எடுத்துக் கூறப்பட்டு அதை வைத்து ஆளும் கட்சியிலே உள்ள அருமை நண்பர்கள் எல்லாம் இங்கே மிக விரிவாகப் பேசி இருக்கிறார்கள். இங்கே உரையாற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. அழகர்சாமி அவர்கள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் பிறப்பித்த ஆணை ஒன்றை மிகச் சுருக்கமாக இங்கே சுட்டிக் காட்டினார்.

தலைவரவர்களே, பெயர்கள் எதுவும் குறிப்பிட்டால் அது இந்த அவையின் மரபுக்கு ஒத்ததாகாது என்று அவைத் தலைவர் ஒரு தீர்ப்பு அளித்திருக்கின்ற காரணத்தால், ஏற்கனவே அளிக்கப் பட்ட தீர்ப்பினை சுட்டிக்காட்டி இருக்கின்ற காரணத்தால் நான் பெயர் எதையும் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் நடைபெற்ற முறைகேடு எப்படிப்பட்டது என்பதை நான் இந்த அவைக்கும் நாட்டு மக்களுக்கும் உணர்த்த வேண்டிய இடத்திலே இருக்கி

1978 செப்டம்பர் 9] [திரு. மு. கருணாநிதி]

றேன். 21–6–1978-லே செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் பிறப்பித்த ஆணை இது. அதிலே அவர் சொல்கிறார் 'நேரிலே சென்று பார்வையிட்ட வகையிலேயும் (நான் முழுவதும் படிக்கவில்லை, ஆங்காங்கே இருக்கின்ற குறிப்பிட்ட இடங்களை மாத்திரம் மொழி பெயர்த்துப் படிக்கின்றேன்) நேரிலே சென்று பார்வையிட்ட வகையிலேயும் விசாரித்த வகையிலேயும் இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள திரிசூலம் அண்ணா அரிசன் புளூ மெட்டல் வொர்க்கர்ஸ் கோ-ஆப்பரேடிவ் சொசைட்டியினர் அதனுடைய தலைவரின் சொற்படி சர்வே நம்பர் 25/2பி என்ற அரசாங்க நிலத்தில் அரசாங்கத்தின் ஒப்புதலோ கலெக்டரின் ஒப்புதலோ இல்லாமல் கல் வெட்டத் தொடங்கி இருக்கிறார்கள். அஃதன்னியில் திரு. வி. குப்புசாமி ஐயர் என்பவர் குத்தகைக்கு எடுத்துள்ள இடத்திலேயும் அந்த சொசைட்டியினர் கல்லை வெட்டி இருக்கிறார்கள். இந்தத் தவறு நடைபெற்றது என்பதை துணைத் தலைவர் விசாரணையில் ஒப்புக்கொண்டிருக்கிறார். இப்படி அந்த சொசைட்டியின் தலைவர் நடந்து கொண்டது டிரஸ்பாஸ்—

The quarrying is illegal and illicit. Nothing prevented the President of the Society.

கலெக்டர் மேலும் சொல்கிறார்,

The President has allowed his people to commit the offence of illicit quarrying and trespass. The offence committed is grave and taking law into one's hands should not be encouraged.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடிச் சொல்கிறார்கள். சட்டம் அதன் கடமையைச் செய்யும், சட்டத்தை யாரும் தன் கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று. ஆனால் கலெக்டர் தன் உத்தரவில் சொல்கிறார்,

the offence committed is grave and taking law into one's hands

இந்தக் குற்றத்திற்கு எதிராக கலெக்டர் அவர்கள் முக்கியமாக என்ன குறிப்பிடுகிறார்கள் என்பதை, அதை ஆங்கிலத்தில் படிக்கிறேன், taking a lenient view.

இந்தக் குற்றத்திற்கு எதிராக அவர்கள் எடுக்கிற ஆக்ஷன், நடவடிக்கைகள், lenient view.

2,470 லாரி லோடுகள் இல்லிஸிட் முறையில் எடுக்கப்பட்டிருக்கின்றன,

[திரு. மு. கருணாநிதி] [1978 செப்டம்பர் 9

Pending decision on the offence and trespass, I compound the offence of illicit quarrying of blue metal jelly of 2,470 lorry loads and order recovery of Rs. 33,345.

அதற்கு அபராதம், 'லீனியன்ட் வ்யூ' எடுத்த காரணத்தால், ஏன், 'லீனியன்ட் வ்யூ' எடுத்தார்கள் என்று தெரியவில்லை—ஒரு சொசைட்டி, அங்கீகரிக்கப்படாத சொஸைட்டி, அங்கீகரிக்கப் படாத சொஸைட்டியின் தலைவர் அங்குள்ள எல்லா நிலங்களிலும் புகுந்து விளையாடிச் செல்கிறார். எல்லாக் கற்களையும் எடுக்கச் சொல்கிறார்கள். அரசாங்க நிலங்களிலுள்ள கற்களை மட்டும் அல்ல, இன்னொருவர் குத்தகைக்கு எடுத்திருக்கிற நிலங்களிலும் இவர்களது ஆட்கள் தங்குதடையின்றி செல்கிறார்கள். அவரை எதுவும் தடுக்க முடியாது என்று கலெக்டரே கண்ணீர் விடுகிறார். இந்த ஆர்டரை போட்டு விட்டு கலெக்டர் இந்தப் பணத்தை 15 நாட்களுக்குள் கட்டவேண்டும் என்று அண்ணா ஹரிஜன ப்ளூ மெட்டல் கூட்டுறவு சொஸைட்டி தலைவருக்கு உத்தர விட்டிருக்கிறார். இந்த உத்தரவு 21—6—78-ல் இடப்பட்டு இருக்கிறது. பணம், ரூ. 33,000, 2,470 லாரி லோடுகள். உரிய விலைதானா என்று எனக்குத் தெரியாது. 'லீனியன்ட் வ்யூ' எடுத்திருக்கிற காரணத்தால் குறைந்த விலையாகக்கூட இருக்க லாம். அதுவும் கட்டப்பட்டதா இல்லையா என்று தெரியவில்லை. யார் அந்த சொஸைட்டியின் தலைவர்? அவர்கள் ஆளும்கட்சி யின் ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவர், மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டவர் என்று சொல்லப்படுகிற நிலையில் நான் கேட்க விரும்புகிறேன். கவர்னர் அவர்களது உரையில், நிர் வாகத்தில் எந்தவிதமான தலையீடும் இல்லை, எந்தவிதமான ஊழலும் இல்லை, ஊழலை எதிர்த்துப் போராடுகிறோம் என்று சொல்லி, 2,470 லாரி லோடுகளை அவருக்கு உரிமை இல்லாத அரசாங்கத்தினுடைய இடத்திலும், இன்னொருவர் குத்தகைக்கு எடுத்திருக்கிற இடத்திலும் நுழைந்து அவற்றை திருட்டுத்தன மாக, 'இல்லீகல்', 'இல்லிஸிட்' என்று கலக்டரே ஒத்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு எடுத்திருக்கும் முறைகேடுகள் நடை பெற்றிருக்கின்றன என்று நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கழக ஆட்சிக் காலத்தில் மருத்துவக் கல்லூரியிலோ அல்லது என்ஜினீயரிங் கல்லூரியிலோ அட்மிஷன் விஷயத்தில் யாராவது ஒரு மாணவர் வழக்குமன்றத்திற்கு சென்றுவிடுவாரேயானால், நீதிமன்றத்திற்கு சென்றுவிடுவாரேயானால் அது பெரிய பூதாகார மாகப் பேசப்பட்டு பார், பார், ஊழல், ஊழல் என்று சொல்லி முழக்கமிடுவது இன்றைக்கு ஆளும் கட்சி எதிர்க்கட்சியாக இருந்த போது வாடிக்கையாகக் கொண்டிருந்த ஒரு விவகாரம். நான் தங்களிடம் இன்றைக்கு சுட்டிக்காட்ட விரும்புவது, மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய தேர்வெண்கள் சென்ற ஆண்டு

திருத்தத்தோடு வெளியிடப்பட்டன. டைப் செய்யும்போது இது தவருகச் செய்யப்பட்டு விட்டது என்று கூறி திருத்தத் தோடு சென்ற ஆண்டு வெளியிடப்பட்டன. அதைப்பற்றி பிரச்னை கள் அப்போது எழுந்தன. அதற்கு சில விளக்கங்கள், சமா தானங்கள் தரப்பட்டன. அதே தவறு இந்த ஆண்டும் நடை பெற்றிருக்கிறது. அந்தத் தவறை விட்டுவிடுவோம். அதற்கு அரசாங்கச் சார்பில் என்ன சமாதானம் வேண்டுமானுலும் சொல்லட்டும், மருத்துவக் கல்லூரி மாணவர்களின் தேர்வுப் பட்டியல்கூட வெளியிடப்படுவதில் தாமதம். இந்த அரசாங்கம் தாமதத்தில் ஒரு மிக முக்கியமான இடத்தை வகித்து வருகிறது. அதற்காக அவசரம் வேண்டும் என்று சொல்லமாட்டேன். தாம தத்திற்கும் அவசரத்திற்கும் இடையில் விரைவு என்று ஒன்று இருக்கிறது. அதை இந்த அரசு கடைப்பிடிக்கவில்லை என்பது தான் என்னுடைய குறைபாடு, என்னுடைய குற்றச்சாட்டு விரைவாக முடிவுகள் எடுக்கப்படாமல் பல்கலைக் கழக துணை வேந்தர்கள் பதவிகள், சென்னைப் பல்கலைக் கழகமானுலும் சரி, மதுரைப் பல்கலைக் கழகமானுலும் சரி இவற்றிற்கு யாரை நியமிப் பது என்பதிலிருந்து மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பட்டியல், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பட்டியல் வெளியிடுகிற வரையில் பெரும் தாமதத்தை நாம் இன்றைக்குக் காண்கிறோம். அதிலும் மருத்துவக் கல்லூரி தேர்வு பெருத சில மாணவர்கள் நாங்கள் அதிக எண்களைப் பெற்றிருக்கிறோம், நாங்கள் தகுதி படைத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று கூறி நீதி மன்றத்தில் வழக்காடச் சென்றிருக்கிறார்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(பிற்பகல் 1-00).

என்ஜினீயரிங் கல்லூரியை எடுத்துக் கொண்டால் ஒரு பெரிய விபரீதமான வேடிக்கை நடைபெற்றிருக்கிறது. என்ன வேடிக்கை என்ருல் முதலில் தேர்வுப் பட்டியல் வெளியானது. அதில் 95 சதவிகிதம் மார்க்குகள் வாங்கிய ஒரு இஸ்லாமிய மாணவன் தன்னை தேர்ந்தெடுக்கவில்லை என்று வழக்கு போட்டார். அந்த வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தபோது, அரசாங்கத்தின் சார்பில் வாதாடிய அரசாங்க வக்கீல் என்ன கூறினுர் என்ருல், அரசாங்கத்தின் சார்பில் என்ன எடுத்து வைக்கப்பட்டது என்ருல், 'இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட்' எழுதியவர்கள் அதிக மார்க்குகள் வாங்கியிருக்கலாம். நாங்கள் வைத்திருக்கின்ற தேர்வு கமிட்டி யினுடைய கொள்கை என்னவென்ருல், இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்குகள் வாங்கியவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை என்பது தேர்வு கமிட்டியினுடைய கொள்கை என்று அரசாங்க சார்பில் வாதாடிய அரசாங்க வக்கீல் எடுத்துக் கூறியிருக்கிருர். இவ்விதம் வாதாடி முடித்துவிட்ட பிறகு தான் உண்மை தெரிந் திருக்கிறது. இதே போன்று இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க் வாங்கிய இன்னொரு மாணவரைத் தேர்ந்தெடுத்து இருக்கிருர்கள். அவர் யார் என்ருல், ஜி. கோவர்த்தனன் என்ப

வர், தேர்ந்தெடுக்கப்பட்ட எண். 13703. இந்த எண்ணுள்ளவர் ‘ இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் ’ எழுதி அதிக மார்க்கு வாங்கியவர் அவர் எஞ்சினீயரிங் காலேஜ்-க்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்- தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு, இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்கு வாங்கிய மாணவன் தான் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று உயர்நீதிமன்றத்திற்கு வந்த பின்னால், அதன் மீது அரசாங்க வக்கீல் இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்கு வாங்கியவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை என்பது தேர்வுக் கமிட்டியின் கொள்கை என்று நீதிமன்றத்தில் வாதாடுகிறார்கள். தீர்ப்பு வேறு விதமாக அமைந்தது. அது வேறு விஷயம்.

இருப்பினும் நீதிமன்றத்தில் அரசாங்க வக்கீல் உண்மைக்கு மாறாக சொல்லி விட்டதால், அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக கோவர்த்தனன் என்பவர் 13703 என்ற எண் வெற்றி பெற்றுள்ளதாக பத்திரிகையில் வெளிவந்துவிட்ட பிறகு, சேலம் எஞ்சினீயரிங் கல்லூரியில் சேர்வதற்காகச் செல்கிறார். ஆனால் அங்கே இவரை சேர்க்காதே என்று உத்தரவு போகிறது. என்ன காரணம் தெரியுமா? இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்கு வாங்கியவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை என்பது தேர்வு கமிட்டியினுடைய கொள்கை, இது அரசாங்கத்தினுடைய கொள்கை என்று நீதிமன்றத்தில் அரசாங்க வக்கீல் வாதாடி இருக்கிறார். ஆனால் இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க் வாங்கிய ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தேர்ந்தெடுத்த பிறகு சேலம் எஞ்சினீயரிங் கல்லூரியில் சேருவதற்கு அவர் செல்லும் போது, அவரை அங்கே சேர்க்காதே என்று சொல்லுவதற்கு காரணம் ஏற்கனவே இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க் வாங்கியவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க் வாங்கியவரை சேர்த்துக்கொள்ள முடியாது. இதன் அடிப்படையில் அரசாங்க வக்கீல் நீதிமன்றத்தில் வாதாடியிருக்கிறார். அந்த வாதத்திற்கு முரணாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காக இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட்டில் அதிக மார்க்கு வாங்கிய மாணவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஆகவே இடித்துக் கொண்டு போய் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த மாணவரைத் தடுத்திருக்கிறார்கள். இப்படி பெரிய குழப்பம், துக்ளக் தர்பார் என்று சொல்வார்கள். ஆனால் சரித்திர ஆசிரியர்கள் அதற்கு மாறுபடுகிறார்கள். ஆனால் இங்கே அதற்கு வியாக்கியான வடிவமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாணவனும் இப்போது தன்னை செலக்ட் செய்ய வேண்டும் என்று நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதாகக் கேள்வி.

1978 செப்டம்பர் 9] [திரு. மு. கருணாநிதி]

இப்படிப்பட்ட பெரியதொரு குழப்பம், நிர்வாகத்தில் நேர்வு முறையில் ஏற்பட்டிருக்கிறது. இவைகளை நான் இந்த அவையில் எடுத்துச் சொல்வதின் மூலமாக பொதுமக்களுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்திற்கும் எடுத்துச் சொல்லிக்கொள்வதோடு, இவ்வளவு தவறுகளையும் வைத்துக் கொண்டு எதிர்க்கட்சியிலுள்ளவர்களைப் பார்த்து, அடிக்கடி ஊழல் ஊழல் என்றும், முறைகேடு முறைகேடு என்றும் சொல்லிக் கொண்டிருப்பதில் பொருள் இருக்க முடியுமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக மிக முக்கியமான ஒரு விஷயத்தை, உடனடியாக நடவடிக்கை எடுத்து பரிசீலிக்க வேண்டிய விஷயத்தை ஒரு விசாரணைக் கமிஷன் வைத்தால் அந்த விசாரணை கமிஷனில் நானே சாட்சியங்களை கொண்டு வந்து நிரூபிக்க முடியும் என்கிற ஒரு விஷயத்தை இந்த அவைமுன் எடுத்து வைக்க விரும்பு கின்றேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் புட்லூர் என்கிற கிராமம். திருவள்ளூர் தாலூகாவில் இருக்கிற கிராமம். இதன் அருகாமையில் முருக்கஞ்சேரி இடத்தில் கூவம் ஆறு இருக் கிறது. இங்கு மணல் குத்தகை விடுகிற முறை முன்னால் இருந்து வந்தது. இந்த முறையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் நிறுத்திவிட்டோம். ஏனென்றால், குத்தகை மூலம் மணலை ஏராளமாக கொண்டு போய் விடுவதால், அங்கேயுள்ள பம்பு செட்டுகளுக்கு வரவேண்டிய நீரோட்டம் கெட்டு விடுகிறது என்று விவசாயிகள் முறையிட்டார்கள். அதற்காக கழக அரசு காலத்தில் அந்த முறை தடை செய்து நிறுத்தப்பட்டது. ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பதவிக்கு வந்த பிறகு 15–7–1977-ல் முன்பு கழக அரசால் விவசாயிகளுக்கு சாத மாக எடுக்கப்பட்ட முடிவை மாற்றி விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படும்படியான அளவில், இந்த முருக்கஞ்சேரி பகுதியில் மணல் எடுக்கின்ற குத்தகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை டி.எம். தண்டபாணி என்பவர் 30,100 ரூபாய்க்கு ஏலம் எடுத்திருக்கிறார்.

அவர் இப்போது இல்லை; இறந்து விட்டார். அவர் அகில இந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர். கொல்லப்பட்டு விட்டார் என்பதை நான் எடுத்துச் சொல்லும்போது, அவர் தி.மு.க. வாக இருந்தாலும் அல்லது அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வாக இருந்தாலும் அல்லது வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்த வராக இருந்தாலும், கொல்லப்பட்ட ஒருவர் எந்தச் சூழ்நிலை யில் கொல்லப்பட்டார்? ஆனால் அந்தக் கொலை எந்த அளவிற்கு மறைக்கப்பட்டிருக்கிறது என்பதை இம் மாமன்றத்தின் மூல மாக அரசுக்கு எடுத்துச் சொல்வதன் மூலம், பரிகாரம் கிடைக் கும் என்பதற்காக எடுத்துச் சொல்கிறேன். அந்த தண்டபாணி என்கிற ஏலம் எடுத்தவருக்கும், ஆளும் கட்சியிலே உயர்பதவி யில் இருக்கும் எம்.எல்.ஏ. -க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அந்தக் குத்தகை சம்பந்தமாக, பண தொடர்புகளும் இருந்திருக் கின்றன. அதற்கு என்னிடத்தில் ஏராளமான ஆதாரங்கள்

இருக்கின்றன. தண்டபாணி அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வின் ஆதரவாளர் என்பதற்கு அவரே அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வில் சந்தா செலுத்தி, ரசீது பெற்றிருக்கிறார். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தலைமைக் கழகத்தின் காசாளர் கையெழுத்திட்டு, ரசீதும் கொடுத்திருக்கிறார். அந்த அளவிற்கு இறந்துவிட்ட தண்டபாணி அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆதரவாளர்தான். திடீரென்று அவர் அந்த மணல் குத்தகை எடுத்து, நிறையப் பணம் சம்பாதித்தார். ஒரு நாள், 6–5–1978 அன்று வெளியே சென்றவர் வீட்டுக்கு திரும்பவில்லை. இரண்டு நாட்கள் காணவில்லை. வ்ட்டிலே உள்ளவர்கள் போலீஸாரிடம் முறையிடுகிறார்கள். பிறகு, 9-ஆம் தேதி 'மாலை முரசு' பத்திரிகையில், அந்தப் பகுதியில் குளத்திலே ஒரு பிணம் மிதந்தது, அது ஜி.எச். க்கு கொண்டு வரப்பட்டு அடையாளம் தெரியாத பிணம் என்ற செய்தி வருகிறது. 9–5–1978 அன்று அந்தச் செய்தியைப் படித்தவுடன், தண்டபாணி குடும்பத்தினர் ஆவடி போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று விசாரிக்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள் பிணம், ஜி.எச். -லே இருக்கிறது, அங்கே போய் பாருங்கள் என்று சொல்லுகிறார்கள். உடனடியாக, தண்டபாணியின் உறவினர்கள் ஜி.எச். -க்குச் சென்று, சவத்தைப் பார்த்து, அது தண்டபாணி தான் என்று அடையாளம் கண்டுபிடிக்கின்றார்கள். பிறகு, சவம் அவர் வ்ட்டாரிடம் ஒப்படைக்கப்படுகிறது. அதைக் கொண்டுவந்து, அவர் கிராமமான புட்லூர் கிராமத்தில் தகனம் செய்துவிடுகிடுறார்கள்.

அதற்குப் பிறகு, அவர்கள் ஜி.எச். க்குச் சென்று அவரது உறவினர்கள் தண்டபாணி பிரேத பரிசோதனையின் சர்டிபிகேட் கேட்கின்றார்கள். அதற்கு ஜி.எச். தந்த பதில் என்ன தெரியுமா? அடையாளம் தெரியாத பிணங்களுக்கு, விதிப்படி சர்டிபிகேட் கொடுப்பது பழக்கமில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். நான் எழுப்புகின்ற கேள்வியெல்லாம், அச்சவத்தை குறிப்பிட்ட அந்த வீட்டாரிடம் எப்படிக் கொடுத்தார்கள்? அவர்கள் அடையாளம் கண்டு பிடித்த பிறகு, அவர் என்னுடைய கணவன், அவர் என்னுடைய அண்ணன், மாமன், மைத்துனர் என்றெல்லாம் சொல்லிய பிறகு, அச்சவத்தைக் கொடுத்துவிட்ட பிறகு, ஜி.எச்.-லே சர்டிபிகேட் கேட்கும்போது, அடையாளம் தெரியாத பிணத்திற்கு விதிப்படி சர்டிபிகேட் தரமாட்டோம் என்று சொல்லுகிறார்கள். பிறகு 10 நாட்கள் கழித்து, தண்டபாணியின் விதவை மனைவி சக்குபாய் அவர்தம் வீட்டிலே இருக்கின்ற பீரோவிலே சில கடிதங்களைக் காண்கிறார். அந்தக் கடிதங்கள் எல்லாம் தண்டபாணி கைப்பட எழுதப்பட்டவை. அதிலே என்ன எழுதியிருக்கிறது என்றால், தான் எடுத்த மணல் குத்தகை விவரத்தையும் தனக்கும் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. -க்கும் இடையே இருந்த பணத் தொடர்பு பற்றியும், தனக்கும் அந்த எம்.எல்.ஏ. -க்கும் ஏற்பட்ட பகை பற்றியும் குறிப்பிட்டு, கைப்பட கடிதம் எழுதியிருக்கிறார், கவர்னர் அவர்களின் விலாசமிட்டு.

1978 செப்டம்பர் 9] [திரு. மு. கருணாநிதி]

ஆளும் கட்சி எம்.எல்.ஏ. வுக்கு முதலில் கார் வாங்க 20,000 கொடுத்தேன் என்று கைப்பட எழுதியிருக்கிறார்கள். அதன் போட்டோ-ஸ்டாட் காப்பியும், கடிதமும் என்னிடம் இருக்கின்றன. அடிக்கடி மிரட்டியதன்பேரில், ரூபாய் 8,000-ம், அதற்குப் பிறகு ரூபாய் 2,000-ம் ஆகமொத்தம் ரூ. 30,000 தான் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. வுக்கு கொடுத்திருக்கிறேன் என்று தண்டபாணி கைப்பட எழுதியிருக்கிறார். பணவிவகாரத் தகராறு ஏற்பட்டு, இந்தக் கடிதம் 30–1–1978-ல் அவர் கைப்பட எழுதப்பட்டு, பீரோவில் இருக்கிறது. அந்த எம்.எல்.ஏ. வினால் தன் உயிருக்கு எந்த நேரத்தில் ஆபத்து ஏற்படலாம் என்று அவர் கைப்பட எழுதியிருக்கிறார். அவர் பயந்தவாறு, அவர் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. மேலும், அவர் துண்டுத் தாளில் சில கணக்குகளை எழுதியிருக்கிறார். அதைப் படித்தால், எப்படி ஊழலற்ற ஆட்சி நடை பெறுகிறது என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

(பிற்பகல் 1–10)

கணக்குப் பட்டியல்—

1–4–1978—திருப்பதிக்கு 6,000 ரூபாய்; அது ஆள் பெயரோ அல்லது திருப்பதி உண்டியலில் போட்டாரோ எனக்குத் தெரியாது. எம்.பி.-க்கு 4,000 ரூபாய்; எந்த எம்.பி. தெரியாது, பெயர் இல்லை. எங்கள் கட்சியில் ஒரே ஒரு எம்.பி. தான் இருக்கிறார்—ஆசைத்தம்பி. ஆர்.டி.ஓ. வுக்கு 1,750 ரூபாய்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில விவரங்களை இங்கே தருகிறார்கள். அவை குற்றச்சாட்டுகள் என்ற வகையில் அமைகின்றன. நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் சோமசுந்தரம் அவர்கள் சில விவரங்களைச் சொல்கிறபோது அந்த விவரங்களை அவர் நம்புகிறாரா என்பதுதான் முக்கியம் என்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் யார் வேண்டுமானாலும் எதையாவது ஒன்றை எழுதி வைத்துவிட்டால் அதை இங்கு வந்து படிப்பது சரிதானா?

திரு. மு. கருணாநிதி: இறந்து போனவருடைய மரண வாக்கு மூலம் போல் இருக்கிறது. அவருடைய கைப்பட எழுதிய கடிதத்தைத்தான் படிக்கிறேன். ஃபோட்டோஸ்டட் காப்பியைக் கூட நம்பாமல், அவர் கைப்பட எழுதிய கடிதத்தையே வாங்கி, அவர் டில்லிக்குச் சென்றிருந்தபோது மனைவிக்கு எழுதிய கடிதம், தபாலில் வந்த கடிதத்தோடு ஒத்திட்டுப்பார்த்து இவ்வளவு ஆதாரங்களோடு வைத்திருக்கிறேன். நான் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். அவருடைய துணைவியாரும், சகோதர

ரும் வந்து என்னிடத்தில் ஒரு மனுவைக் கொடுத்து இதை அரசாங்கத்திடம் சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உங்கள் மீது குற்றம் சொல்லவில்லை. எந்தக் கட்சியிலும் தவறு செய்பவர்கள் இருக்கக்கூடும். நான் இதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். ஒரு விசாரணை வைக்கப்படுமானால் அந்த விசாரணையில் இவ்வளவு சாட்சியங்களையும் கொண்டு வந்து தந்து பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஹெட் கிளார்க்கு 150 ரூபாய் ; தாலூகா ஆபீசில் 500 ரூபாய் ; தாலூகா ஆபீஸ் ஹெட் கிளார்க்குக்கு 200 ரூபாய். இதெல்லாம் லஞ்ச ஊழல் இல்லையா, ஆட்சியின் தலையீடு இல்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திருப்பதிக்கு 6,000 ரூபாய் ; எம்.பி.க்கு 4,000 ரூபாய்; ஆர்.டி. ஓ. வுக்கு 1,750 ரூபாய் ; ஹெட் கிளார்க்குக்கு 150 ரூபாய் ; தாலூகா ஆபீசில் 500 ரூபாய் ; தாலூகா ஆபீஸ் ஹெட்கிளார்க்குக்கு 200 ரூபாய். இப்படியெல்லாம் மணல் குத்தகை விஷயமாக பல பண புழக்கங்களைச் செய்யவேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள்.

8-6-1978 அன்று ஐ.ஜி. ஆப் போலீசுக்கு இறந்த தண்டபாணியின் மனைவி சக்குபாய் நீண்ட கடிதம் எழுதி யார் கொலை செய்திருக்கக்கூடும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இறந்த தண்டபாணி மனைவி சக்குபாய், கொலைக்கு யார் காரணமாக இருக்கக் கூடும் என்று கூறுகிற விஷயம் பற்றி, கைப்படக் கடிதம் எழுதி இதுவரை ஐ.ஜி. ஆப் போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை?

ஒருவர் கொலை செய்யப்பட்டார் அல்லது தற்கொலை செய்து கொண்டார். பிணம் குளத்தில் மிதந்தது ; சந்தேகங்கள் எழுகின்றன என்ற உடனே அந்த வீட்டைப் போலீசார் சோதனையிட்டிருக்க வேண்டாமா? தடயங்கள் கிடைக்குமா என்று பார்த்திருக்க வேண்டாமா? அப்படிப் பார்த்திருந்தால் தடயங்கள் கிடைத்திருக்காதா? ஆனால் பார்க்காததும் நல்லது என்று கருதுகிறேன். பார்த்து தடயங்கள் கிடைத்திருந்தால் என்ன கதியாகி இருக்குமோ தெரியாது. இப்போது தடயங்கள் என்னிடத்தில் இருக்கின்றன. இந்த நேரத்தில் இதற்காக விசாரணை வைக்கப்படுமானால் அவற்றைத் தரத் தயாராக இருக்கிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய அவை முன்னவர் மூலமாக நம்முடைய முதலமைச்சர் அவர்களையும் போலீஸ் இலாகாவையும் கேட்டுக்கொள்ள விரும்புவது இந்தப் புகாரை இறந்த தண்டபாணியின் மனைவி என்னிடத்தில் கொண்டுவந்து கொடுத்து விவரங்களைக் கூறிய காரணத்தால் சக்குபாய் குடும்பத்திற்கு என்ன ஆபத்து ஏற்படுமோ என்ற பெரும் அச்சத்திற்கு ஆளாகியிருக்

கிறார்கள். அவர்களுடைய அச்சத்தைப் போக்கும் வகையில் இந்த அரசு அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் அந்தக் குடும்பத் திற்கே கூட பல தொல்லைகள் இந்த விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்ட காரணத்தால் ஏற்படக்கூடும் என்பதால் அந்தக் குடும்பத்தைப் பாதுகாக்கக்கூடிய பொறுப்பை ஐ. ஜி. ஆப் போலீஸ் மூலமாக அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, ஊழலற்ற ஆட்சி, முறைகேடு எதுவும் இல்லாத ஆட்சி. புனிதமான ஆட்சி, உத்தமமான ஆட்சி என்றெல்லாம் கூறி, அடிக்கடி, கவர்னர் உரையாக இருந்தாலும் சரி, பட்ஜட் பிரசங்கமாக இருந்தாலும் சரி, எந்த நேரத்திலும் ஊழலை எதிர்த்துப் போராடுகிறோம், போராடுகிறோம் என்று கூறிக் கொண்டு இவ்வளவு ஊழல்களை தன்னகத்தே வைத்துக் கொண்டு இருக்கும் ஆட்சி இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என் பதை இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஒன்றைச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியும் திராவிட முன் னேற்றக் கழகமும் இணைந்து விட்டதைப் போல் அவர்களாகவே கற்பனை செய்து கொண்டு " இணையலாமா ? " என்று கேட்டார் கள். வேடிக்கை என்னவென்றால் அவர்களும் எங்களோடு சேர மாட்டார்களாம், நாங்களும் யாரோடும் சேரக்கூடாதாம். இது என்ன வாதம் ? அதற்குப் பெயர் விதண்டாவாதம் தானே தவிர வேறு பெயர் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் ஒன்று, கொள்கை ரீதியில் திராவிட முன்னேற்றக் கழகமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் முரண்பாடு கொண்டவையல்ல. டெல்லி மாநிலங்கள் அவையிலே நண்பர் ராமமூர்த்தி அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாறனும் மற்றவர்களும் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அது 356-வது பிரிவு அரசியல் சட்டத்திலே இடம் பெறக் கூடாது என்ற திருத்தமாகும். 356-வது பிரிவின்படி எந்த நேரத்திலேயும் மாநில அரசைக் கலைத்துவிட்டு—கவர்னர் சிபாரிசு செய்தாலும் செய்யாவிட்டா லும் கூட—குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தலாம் என்ற நிலை இருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்திலே இருந்த நிலை இப்போதும் நீடித்துக் கொண்டிருக்கிறது. அந்த 356-வது பிரிவு இருந்து கொண்டிருக்கிறது. நினைத்தாலும் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தலாம் என்ற நிலை இருக்கக் கூடாது என்ற திருத்தத்தை அளித்து, அந்தத் திருத்தத்தை திராவிட முன்னேற்றக் கழகம், முஸ்லீம் லீக், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பார்வர்ட் பிளாக் கட்சி, ஆதரித்து வாக்களித்திருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கை எழுப்புவதிலே தன்னை யும் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிற அகில இந்திய அண்ணா திராவிட

முன்னேற்றக் கழகம் அந்தத் திருத்தத்தை ராஜ்ய சபாவிலே, மாநிலங்கள் அவையிலே, எதிர்த்து இருக்கிறது, இதை நான் ஆளுங்கட்சிக்கு அல்ல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நினைவு படுத்தி இந்த அளவில் என்னுடைய உரையை முடிக்கிறேன்.

## 10. அரசினர் தீர்மானம்.

### பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, இன்று பகல் 12-30 மணி அளவில் பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவைக்குள் துண்டு பிரசுரம் வீசி குரல் எழுப்பிய (1) திரு. அப்புக்குட்டன், மற்றும் (2) திரு. அனந்தபத்மநாபன் ஆகியோரின் செயல் கண்டிக்கத்தக்கதும், அவையை அவமதிப்பதும் ஆகும். எனவே இது குறித்து தீர்மானத்தை முன்மொழியும்படி மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

இன்று, 9-9-1978, பகல் 12-30 மணியளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டறிக்கைகளை பேரவைக்குள்ளே வீசி எறிந்து, குரல் எழுப்பிய காரணத்தால் காவலில் வைக்கப்பட்டுள்ள அம்பத்தூரைச் சேர்ந்த திரு. ராமன் குட்டி என்பவரின் மகன் திரு. ஆர். அப்புக்குட்டன். என்று கூறிக்கொள்பவரும், அம்பத்தூரைச் சேர்ந்த திரு. சங்கரன் என்பவரின் மகன் திரு. அனந்தபத்மநாபன் என்று கூறிக்கொள்பவரும் பெருங் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெருங் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது. அவர்கள் இருவரும் ஏழு நாட்கள் வெறுங்காவல் தண்டனை (Simple imprisonment) அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்றும் இப்பேரவை தீர்மானிக்கிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, 7 நாட்கள் சிம்பிள் இம்பிரிசன்மெண்ட் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நேற்று இதே மாதிரி சம்பவம் நடைபெற்றபோது நேற்றும் குரல் எழுப்பப்பட்டது, துண்டுப் பிரசுரம் போடப்பட்டது, நேற்றைக்கு நான் புரிந்துகொண்டவரைக்கும் நேற்றைய தினம் சாயங்காலம் வரைக்கும் தான் தண்டனை என்று. இன்றைக்கும் அதே மாதிரி நடந்திருக்கிறபோது - அதே நபர் அல்ல, அதே நபராக இருந்தால் புரிந்துகொள்ளலாம்—வேறு நபர் அப்படிச் செய்கிறபோது 7 நாட்கள் சிம்பிள் இம்பிரி